[1987 மார்ச் 28

வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களில் புதிய சத்துணவுக் கூடம்.

225—(* வினா எண் 9336) திரு. த. பழனி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு, திமிரி ஒன்றியங் களில் புதிதாக எத்தனை சத்துணவுக்கூடம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளது?

(ஆ) அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருப்பூர் மங்கலம் பஞ்சாயத்தில் கிராமிய நூற்பு மையம்.

226—(* வினா எண் 11401) திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் பஞ்சாயத்தில் கிராமிய நூற்பு மையம் அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம் ஊராட்சி, அதுபோல் திருப்பூர் ஒன்றியம் இதுகுறித்து தீர்மானங்களைப் போட்டு அரசுக்கு அனுப்பியிருக் கிறார்கள். இதுவரையில் அரசுக்கு கோரிக்கை வரவில்லை என்றாலும் கூட இதையே கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு, மங்கலம் பகுதியில் கிராமிய நூற்பு மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.